1980 ஜூலை 28] [திரு. வே. இரா. ஜெயராமன்]

எங்களது தேனித் தொகுதியிலுள்ள புலிகுத்தி, மார்க்கயன் கோட்டை, குச்சலூர், ஐயம்பட்டி ஆகிய மேடான வறண்ட பகுதிகளும் பயனடையும் வகையில் தற்சமயம் ஆய்விலுள்ள மேலப்பெரியாறு திட்டத்தை பெரியகுளம் வரை மேற்குமலை அடிவாரத்தையொட்டி பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைப் போல ஏற்படுத்தித் தரும்படி மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.

அன்னஞ்சி கிராமத்தில் சிகு ஓடையின் குறுக்கே ஒரு அணை யினை ஏற்படுத்தி பாசன வசதி செய்து தர வேண்டுகிறேன். இதன் மூலம் வறண்டுபோன கிணறுகளில் நீரூற்றுக்கள் ஏற்படு வதற்கும் புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி கிடைப்பதன் மூலம் நிரந்தர வேளாண்மை வேலைவாய்ப்பு ஏற்படுகின்ற சாத்தியக்கூறுகள் அதிகமிருப்பதால் இந்தத் திட்டத்தை 'ஸ்பெ ஷல் மைனர் இரிகேஷன்' திட்டத்தில் சேர்த்து அரசு ஆணையிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித்துறையில் தினக் கூலிகளாகப் பணியாற்று கின்ற சுமார் 300 பேர்களுக்கு மேற்பட்ட டிப்ளமோ படித்தவர் களை தொழில் நுட்ப உதவியாளர்களாக நிரந்தரப்பணியில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கை மாவட்டம் உத்திரமேரூர் தொகுதியில் நூறாண்டுக் காலமாக பரிசீலனையில் இருந்துவரும் எடமச்சி கால்வாய், பாலேஸ்வரம் நீர்த்தேக்கத்திட்டம் ஆகியவைகளை உடனடியாக நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் 12,000 ஏக்கர் பாசன வசதி பெறும். பல்லாண்டு காலமாக கேட்கப்பட்டு வருகிற தேனி தொகுதியிலுள்ள திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, எனக்கு பேச வாய்ப் பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

7. அறிவிப்பு.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலை (28–7–80) சுமார் 11-40 மணி அளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவைக்குள் துண்டு அறிக்கை வீசி, கோஷங்கள் எழுப்பிய திரு. ராஜு என்பவர் மகன் திரு. ஆர். பி. வேலன்; துண்டுப் பிரசுரங்களை வீச முயற்சித்து கோஷங் களை எழுப்பிய திரு பாலுசாமி என்பவர் மகன் திரு. பி. நந்த குமார் ஆகியவர்களுடைய செயல் கண்டிக்கத்தக்கதும் பேரவையை அவமதிக்கும் செயலும் ஆகும்.